வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : கிருஷ்ணமூர்த்தி ராமசுப்ரமணியன்

தேதி : 21.02.2026 - சனிக்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

***தலைப்புச் செய்திகள்***

- நாட்டின் வளர்ச்சிக்கு "Corporate சமூக பொறுப்பு" மிகவும் இன்றியமையாதது என்று குடியரசு துணைத் தலைவர் திரு.சி.பி.ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.
- பிரதமர் திரு. நரேந்திர மோடி, பிரேசில் அதிபர் திரு. Luiz Inacio Lula Da Silva இடையேயான பேச்சுக்கள் இன்று புதுடெல்லியில் நடைபெற்றன.
- செயற்கை நுண்ணறிவு தாக்க உச்சி மாநாடு 2026 இன்று புதுதில்லியில் உள்ள பாரத் மண்டபத்தில் நிறைவடைந்தது.
- NCERT மற்றும் ஆரோவில் நிர்வாகத்தினர் இடையே உயர்மட்டக் கூட்டம் ஆரோவில்லில் இன்று நடைபெற்றது.

***சி.பி. ராதாகிருஷ்ணன் (12)***

நாட்டின் வளர்ச்சிக்கு "Corporate சமூக பொறுப்பு" மிகவும் இன்றியமையாதது என்று குடியரசு துணைத் தலைவர் திரு.சி.பி.ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார். புதுடெல்லியில் நடைபெற்ற தேசிய C.S.R. உச்சி மாநாட்டில் உரையாற்றிய அவர், பொதுக்கல்வி முறைகள், ஆரம்ப சுகாதாரம், சமூக தேவைகளுக்கு ஏற்ப, திறன் மேம்பாட்டு ஒருங்கிணைப்பு அவசியம் என்று அவர் குறிப்பிட்டார். இதன் மூலம், ஆக்கப்பூர்வமான மாற்றங்கள் உருவாகும் என்று சுட்டிக்காட்டினார். கடந்த பத்து ஆண்டுகளில் சீர்திருத்தங்கள், மின்னணு தொடர்புகள், நிதி உள்ளடக்கம், வறுமையிலிருந்து மக்களை

மீட்டெடுத்தல் ஆகியவை சிறப்பாக செயல்பட்டதாக எடுத்துரைத்தார். உலக பொருளாதாரத்தில் நம் நாடு நான்காவது பெரிய பொருளாதார தேசமாக உருவெடுத்து இருப்பதையும் குடியரசு துணைத் தலைவர் சுட்டிக்காட்டினார்.

*சி.பி.ராதாகிருஷ்ணன் அகராதி (14)*

இந்திய அரசியலமைப்பு மக்களை அவர்களின் சொந்த மொழியில் சென்றடையும் போது தான் அதன் உண்மையான வலிமையை பெறுகிறது என்று புதுடெல்லியிலுள்ள துணை குடியரசு தலைவர் மாளிகையில் இன்று நடைபெற்ற விழாவில் குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் கூறினார். குஜராத் மற்றும் தமிழ் மொழிகளில் அரசியலமைப்பு மற்றும் ஆங்கிலத்திலிருந்து இந்தி மொழிக்கு எட்டாவது சட்ட சொல் அகராதி ஆகிய நூல்கள் இவ்விழாவில் வெளியிடப்பட்டது. குஜராத்தி மற்றும் தமிழ் ஆகியவை நாட்டின் வளமான செம்மொழி மற்றும் கலாச்சார மொழிகளில் ஒன்று என்று குறிப்பிட்ட குடியரசு துணைத் தலைவர், அவை பல நூற்றாண்டுகளின் இலக்கியம் மற்றும் அறிவு சார் பாரம்பரியத்தைக் கொண்டுள்ளதாக தெரிவித்தார். இந்த மொழிகளில் அரசியலமைப்பு கிடைப்பதன் மூலம் மக்கள் தங்கள் உரிமைகள், கடமைகள் மற்றும் ஜனநாயக பொறுப்புகளை நன்கு புரிந்துகொள்ள முடியும் என்று அவர் கூறினார்.

*பிரதமர் மோடி -1 (18)*

குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு மற்றும் பிரதமர் திரு.நரேந்திர மோடி ஆகியோர், பிரேசில் அதிபர் திரு. Luiz Inacio Lula Da Silva-வை, பாரம்பரிய முறையில் வரவேற்றனர். தொடர்ந்து, பிரேசில் அதிபர், ராஜ்காட்டிலுள்ள மகாத்மா காந்தி நினைவிடத்தில் மரியாதை செலுத்தினார். பிரதமர் திரு. நரேந்திர மோடி, பிரேசில் அதிபர் திரு. Luiz

Inacio Lula Da Silva இடையேயான பேச்சுக்கள் இன்று புதுடெல்லியில் நடைபெற்றன. இருநாடுகளுக்கு இடையேயான உறவை மேலும் வலுப்படுத்துவது குறித்து இரு தலைவர்களும் விரிவாக விவாதித்தனர். சர்வதேச அமைப்புகளுள் ஒருங்கிணைந்து செயல்படுவது குறித்தும் இதில் ஆலோசிக்கப்பட்டது. டிஜிட்டல், கனிமங்கள், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் மற்றும் கடலோர துறைகளில் இந்தியாவும், பிரேசிலும் பல ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளன. பிரதமர் திரு.நரேந்திர மோடி தமது கூட்டறிக்கையில் அதிபர் லூலா-வின் தலைமையின் கீழ் இந்தியா, பிரேசில் உறவுகள் வலுப்பெற்றுள்ளதாக கூறினார். லத்தீன் அமெரிக்காவில் இந்தியாவின் மிகப்பெரிய வர்த்தக கூட்டாளியாக பிரேசில் உள்ளது என்று கூறிய பிரதமர், வரும் ஐந்து ஆண்டுகளில் இருதரப்பு வர்த்தகம் இருபது பில்லியன் அமெரிக்க டாலருக்கு மேல் அதிகரிக்கும் என்று உறுதியளித்துள்ளார்.

***<u>பிரதமர் மோடி -2 (06)</u>***

இந்தியா-பிரேசில் வர்த்தகம் என்பது வெறும் எண்ணிக்கை மட்டுமல்ல, நம்பிக்கையின் பிரதிபலிப்பு என மேலும் கூறினார். ஐ.நா. சீர்திருத்தங்கள், பருவநிலை மாற்றம் மற்றும் பயங்கரவாதத்தை எதிர்த்து போராடுவது உள்ளிட்ட பல்வேறு சர்வதேச பிரச்சனைகள் குறித்து இருநாடுகளும் பொதுவான தங்களது கருத்துக்களை பகிர்ந்து கொள்கின்றன.

***<u>செயற்கை நுண்ணறிவு கண்காட்சி -1 (05)</u>***

புதுடெல்லியில் நடைபெற்று வரும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப உச்சி மாநாட்டில் 118 நாடுகளின் பிரதிநிதிகள் பங்கேற்றுள்ளதாகவும், இந்த உச்சி மாநாட்டின் ஒரு பகுதியான, செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பக் கண்காட்சி இன்று நிறைவடைவதாக மத்திய அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் செய்தியாளர்களிடம் கூறியுள்ளார்.

*செயற்கை நுண்ணறிவு கண்காட்சி -2 (19)*

இந்தியாவின் பொறுப்பான செயற்கை நுண்ணறிவு தொலைநோக்குப் பார்வைக்கு வலுவான உலகளாவிய ஒப்புதலுடன் இந்திய செயற்கை நுண்ணறிவு தாக்க உச்சி மாநாடு 2026 இன்று புதுதில்லியில் உள்ள பாரத் மண்டபத்தில் நிறைவடைந்தது. புதுடெல்லியில் நடந்த நிறைவு செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றிய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ், செயற்கை நுண்ணறிவு தாக்க உச்சி மாநாடு பல முனைகளில் ஒரு பெரிய வெற்றியைப் பெற்றுள்ளது என்றார். ஐந்து லட்சத்துக்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் இந்தக் கண்காட்சியை ரசித்துள்ளனர், நிறைய கற்றுக்கொண்டுள்ளனர், உலகைச் சேர்ந்த பல நிபுணர்களுடன் கலந்துரையாடியுள்ளனர் என்று திரு.அஸ்வினி வைஷ்ணவ் கூறினார்.

உலகின் ஒவ்வொரு பெரிய செயற்கை நுண்ணறிவு நிறுவனமும் அதிக எண்ணிக்கையில் பங்கேற்றதாக அவர் விவரித்தார். பல ஸ்டார்ட்அப்கள் தங்கள் படைப்புகளை வெளிப்படுத்தும் வாய்ப்பைப் பெற்றதாகவும், விவாதத்தின் தரம் தனித்துவமானது என்றும், உள்கட்டமைப்பு தொடர்பான முதலீடுகளுக்கு 250 பில்லியன் டாலர்களையும், வி.சி. ஆழமான தொழில்நுட்ப முதலீடுகளுக்கு சுமார் 20 பில்லியன் டாலர்களையும் தாண்டிய ஏராளமான முதலீட்டு வாக்குறுதிகள் உள்ளன என்றும் அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் கூறினார்.

*செயற்கை நுண்ணறிவு கண்காட்சி -3 (10)*

மேலும், இந்த உச்சிமாநாட்டை அங்கீகரித்து சாதகமாக எடுத்துக்கொண்ட இளைஞர்களுக்கும் அமைச்சர் நன்றி தெரிவித்தார்.

வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் ரந்தீர் ஜெய்ஸ்வால் செய்தியாளர்களிடம் பேசுகையில், இந்த நிகழ்வு ஒரு பெரிய வெற்றி என்று கூறினார். இந்த செயற்கை நுண்ணறிவு உச்சிமாநாட்டில் 20 உலகத் தலைவர்கள் கலந்து கொண்டதாகவும், உலகம் முழுவதிலுமிருந்து அமைச்சர்கள் மட்டத்தில் 45 பிரதிநிதிகள்

பிரதிநிதித்துவப்படுத்தியதாகவும் அவர் கூறினார். உலகளாவிய தெற்கில் வலுவான கவனம் செலுத்தி, இந்த குறிப்பிட்ட உச்சிமாநாட்டில் நூறு நாடுகள் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டன என்று அவர் கூறினார்.

*மன்கி பாத் (08)*

பிரதமர் திரு நரேந்திர மோடியின் 131 ஆவது மன்-கீ-பாத் எனும் மனதின் குரல் நிகழ்ச்சி நாளை காலை 11 மணிக்கு ஒலிபரப்பாக உள்ளது. இந்நிகழ்ச்சியை ஆகாஷ்வாணி மற்றும் தூர்தர்ஷனின் அனைத்து அலைவரிசைகளிலும், AIR செய்தி வலைதளத்திலும், பிரதமர் அலுவலக youtube அலைவரிசை, mygov இணையதளம், மற்றும் Newsonair மொபைல் செயலியிலும், ஒலிபரப்ப கேட்கலாம். ஆகாஷ்வாணியில், பிரதமரின் ஹிந்தி உரையை தொடர்ந்து, அதன் பிராந்திய மொழி வடிவம் இடம் பெறும்.

*மோடி (09)*

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று, உத்தரபிரதேஷ் மாநிலம் மீரட்டுக்கு பயணம் மேற்கொண்டு, அங்குள்ள, சதாப்திநகர் நமோ பாரத் நிலையத்தில் இருந்து, மீரட் மெட்ரோ திட்டத்தையும், நமோ பாரத் ரயிலையும், கொடியசைத்து தொடக்கி வைக்கிறார். மீரட் தெற்கு நிலையம் வரை, மெட்ரோ ரயிலில் அவர் பயணம் செய்கிறார். மொத்தம் 12 ஆயிரத்து 930 கோடி ரூபாய் மதிப்பிலான, பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை, மீரட் பயணத்தின் போது பிரதமர் தொடக்கி வைக்கிறார். டெல்லி-மீரட் இடையிலான, 82 கிலோ மீட்டர் பிரத்யேக நமோ பாரத் ரயில் பாதையும் இதில் அடங்கும்.

*ஆரோவில் கல்வி -1 (03)*

தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (NCERT) மற்றும் ஆரோவில் நிர்வாகத்தினர் இடையே ஒரு உயர்மட்டக் கூட்டம் ஆரோவில்லில் நடைபெற்றது.

*ஆரோவில் கல்வி -1 (16)*

ஸ்ரீ அரவிந்தரின் 'ஒருங்கிணைந்த கல்வி' (Integral Education) தத்துவத்தை நாட்டின் முதன்மைக் கல்வித் திட்டத்தில் இணைப்பதை நோக்கமாகக் கொண்டு, ஆரோவில் மற்றும் NCERT இடையிலான புதிய கூட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இன்று நடைபெற்ற கலந்துரையாடலில் NCERT-இன் ஆசிரியர் கல்வித் துறை பேராசிரியர் டாக்டர் சுஷில் குமார் திவாரி மற்றும் SAIIER நிர்வாகி திரு. ஆரவென் (Auraven) ஆகியோர் பங்கேற்றனர். மனப்பாடம் செய்து தேர்வு எழுதும் முறையிலிருந்து மாறி, மாணவர்களின் முழுமையான வளர்ச்சியை மையமாகக் கொண்ட கல்வி முறையை உருவாக்குவது குறித்து ஆலோசிக்கப்பட்டது.

SAIIER மற்றும் ஒருங்கிணைந்த கல்வி நிர்வாகக் கூட்டத்தின் போது, திரு. ஆரவென் ஆரோவில்லின் கல்வி நோக்கங்கள் குறித்து விளக்கினார். Sri Aurobindo International Institute of Educational Research என்பது ஆரோவில் பள்ளிகளின் ஆராய்ச்சி மற்றும் நிர்வாக அமைப்பு என்றும், இது கடந்த 50 ஆண்டுகளாக 'சுய முன்னேற்றக் கல்வி' முறைகளைச் சோதித்து வருவதாகவும் தெரிவித்தார்.

*ஆரோவில் கல்வி -2 (05)*

ஒருங்கிணைந்த கல்வி என்பது ஒரு மனிதனின் ஐந்து முக்கிய அம்சங்களான, உடல், உயிர், மனம், உணர்வு மற்றும் ஆன்மீகம் ஆகியவற்றை எவ்வாறு மேம்படுத்துகிறது என்பதை இக்குழுவினர் விளக்கினர். இது தேசிய கல்விக் கொள்கை 2020-இன் இலக்குகளை நடைமுறைப்படுத்துவதற்கான ஒரு சிறந்த வழிமுறை என்று அவர்கள் குறிப்பிட்டனர்.

*கோவா (09)*

கோவா Verem கடற்படை கல்லூரியின் ஐந்தாவது கடல்சார் மாநாடு 2026-ஐ கடற்படைத் தளபதி அட்மிரல் தினேஷ் கே. திரிபாதி இன்று தொடங்கி வைத்து உரையாற்றுகையில், கடல்சார் ஒத்துழைப்பின் அவசியத்தை வலியுறுத்திப் பேசினார். நாட்டின் 95 சதவிகித வர்த்தகம் கடல் வாயிலாக நடைபெறுவதாக அவர் தெரிவித்தார். பெருங்கடல் பகுதிகள்--கடல்சார் சவால்களை எதிர்கொள்வது--ஆக்கப்பூர்வமான முன்னோடி முயற்சிகள் என்ற கருப்பொருளுடன் இம்மாநாடு நடைபெறுகிறது. மாலத்தீவு உள்ளிட்ட 14 நட்புறவு நாடுகளின் கடற்படை உயர் அதிகாரிகள் இம்மாநாட்டில் பங்கேற்றுள்ளனர்.

*நாசா (13)*

அமெரிக்காவின் நாசா விண்வெளி மையம் வரும் மார்ச் 6ஆம் தேதி விண்வெளி வீரர்களுடன் கூடிய விண்கலத்தை நிலவிற்கு அனுப்ப தயாராகியுள்ளது. இதற்கான முதற்கட்ட பரிசோதனைகளில் காணப்பட்ட தொழில்நுட்பக் கோளாறுகள் சரி செய்யப்பட்டு மீண்டும் நடத்தப்பட்ட சோதனைகள் வெற்றியடைந்ததை தொடர்ந்து இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. நாசாவின் நிலவு ஆய்வு திட்டப்பணிகளுக்கு இந்த விண்கலத் திட்டம் பெரிதும் பயனளிப்பதோடு, நிலவில் மனிதர்க்ள வசிப்பது குறித்த சாத்தியக் கூறுகளை ஆராயவும் இது பெரிதும் வழிகோலும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த விண்கலத் திட்டப் பயணத்தில் பாதுகாப்பே முதன்மையானது என தெளிவுபடுத்தியுள்ள நாசா இதற்கான உயிர் பாதுகாப்பு செயல்பாட்டுத் திட்டங்கள், விண்கலத்தின் தயார் நிலை ஆகியவை குறித்து துல்லிய கண்காணிப்புகளை மேற்கொண்டு வருகிறது.

***கிரிக்கெட் (08)***

ஐசிசி ஆடவர் டி20 உலகக் கோப்பை தொடரில் சூப்பர் 8 போட்டிகள் இன்று தொடங்குகின்றன. சூப்பர் 8 ஆட்டத்தின் தொடக்க ஆட்டத்தில் நியூசிலாந்து மற்றும் பாகிஸ்தான் அணிகள் இன்று மாலை கொழும்பு ஆர்.பிரேமதாசா மைதானத்தில் மோதுகின்றன. இந்த போட்டி இந்திய நேரப்படி இரவு 7 மணிக்கு தொடங்குகிறது. இதற்கிடையில், இந்திய அணி தனது சூப்பர் 8 சுற்றில் தென்னாப்பிரிக்காவை எதிர்கொள்கிறது. சூப்பர் 8 பிரிவில் இந்தியா, ஜிம்பாப்வே, மேற்கிந்தியத் தீவுகள், தென்னாப்பிரிக்கா ஆகிய அணிகளும் இடம் பெற்றுள்ளன.